[2005 மார்ச் 31

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதி சீரமைப்பு ஆணையம், அப்பணிகள் முடியும் வரையில், ஊராட்சி அமைப்புகளில் எந்தவித மாற்றம் செய்தல் அல்லது புதிதாக ஊராட்சிகள் அமைத்தல் போன்றவற்றிற்குத் தடை உத்தரவு வழங்கியுள்ளதால், வால்பாறை தொகுதி, வால்பாறையில் முடிஸ் பகுதி மற்றும் கருமலை பகுதியையும் சேர்த்து ஊராட்சிகளாக அறிவிக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஸ்ரீ காளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஸ்ரீகாளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஆதாரம் கொண்டு வருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

2005 மார்ச் 31] [திரு. கே.பி. அன்பழகன்]

அறிக்கை

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியம், ஸ்ரீகாளிகாபுரம் ஊராட்சி, ஸ்ரீகாளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனியின் மக்கள் தொகை 450. வறட்சி நிவாரணத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு வரப்பெற்ற நிதி, மூன்றாம் தவணை வரையிலான ஒதுக்கீடு முழுவதும் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எனவே, மீண்டும் நான்காம் தவணை வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு பெறப்பட்டதும், ஸ்ரீகாளிகாபுரம் ஆதிதிராவிட காலனிக்குப் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தினால் புதிய காலனி, பழைய காலனி, காந்தி நகர் ஆகிய கிராமங்கள் பயனடையும்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரிய திட்டங்கள் தினம்தினம் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. விவர அறிக்கையிலேகூட, ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்காகத் தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவர அறிக்கையில் சொல்லப்பட்ட பகுதியைச் சுற்றி, இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு நீராதாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, இப்பகுதியின் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க உடனடியாக நீராதாரம் கண்டு, நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீகாளிகாபுரம் ஊராட்சியில் இரண்டு ஆதிதிராவிடர் காலனிகள் உள்ளன. ஒன்று, பழைய காலனி. மற்றொன்று, புதிய காலனி. பழைய காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. ஸ்ரீகாளிகாபுரம் மெயின் ரோட்டில் உள்ள ஆறு அங்குலம் விட்டமுள்ள ஓர் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து சுமார் 400 அடி நீளத்திற்கு pipe line அமைக்கப்பட்டு, அதன் வழியாக மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின்விசை இறைப்பான் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, காலனியில் வசிப்பவர்களுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள், வறட்சியின் காரணமாக அந்தப் பகுதியிலே தண்ணீர் பற்றாக்குறை என்று

கூறுகின்றார்கள். வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு, நான்காவது தவணை பெறப்பட்டவுடன், ஸ்ரீ காளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள — இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிற்கு நீராதாரம் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிலே நல்லபடி நீராதாரம் இல்லை என்றால், மேற்கொண்டு எங்கே நீராதாரம் நன்றாக இருக்கின்றதோ அங்கே ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு — அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற ஆழ்துளைக் குழாய்க் கிணறு வற்றிவிடுகிறபோது, ஊராட்சிகளில் நிதிவசதி இல்லை என்ற காரணத்தால், இது போன்ற திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற இயலவில்லை. இதுபோன்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் இப்பகுதிக்கு நீராதாரம் கொண்டு வந்து, இப்பிரச்சினையைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அல்லது வறட்சி நிவாரணத் தொகை, இந்த இரண்டில் முன்னுரிமை அடிப்படையில் எதன்மூலம் முதலில் செயல்படுத்த முடிகிறதோ, அதைக்கொண்டு, அந்தப் பகுதியினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன்.

(ஆ) சென்னை ஆர்.கே. நகர் தொகுதி, இளையா முதலி தெரு, கான்கிரீட் சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி.கே. சேகர்பாபு.